ஆதியாகமம்

இது வேதாகமத்தின் முதலாவது புத்தகம்

ஆதியாகமத்தின் அர்த்தம்

- கிரேக்க மொழியில் - **"Genesis"** என்ற வார்த்தைக்கு "ஆரம்பம், மூலம், தொடக்கம்" என்று பொருள்படும்.
- எபிரேய மொழியில் **-"Bereshit"** என்ற வார்த்தைக்கு "ஆதியிலே" என்று பொருள்படும்.

பல ஆரம்பங்களின் புத்தகம்

- பிரபஞ்சத்தின் ஆரம்பம்
- உயிர்களின் ஆரம்பம்
- மனித குலத்தின் ஆரம்பம்
- ஓய்வு நாளின் ஆரம்பம்
- திருமணத்தின் ஆரம்பம்
- பாவத்தின் ஆரம்பம்
- மரணத்தின் ஆரம்பம்
- மீட்பின் ஆரம்பம்
- தீர்க்கதரிசனத்தின் ஆரம்பம்
- குடும்பத்தின் ஆரம்பம்
- மொழியின் ஆரம்பம்
- பலியிடுதலின் ஆரம்பம்

ஆக்கியோன்

- இந்த புத்தகத்தை எழுதியவர் மோசே என்பது பாரம்பரிய நம்பிக்கை.
- மோசேயால் எழுதப்பட்ட முதல் ஐந்து புத்தகங்களை எபிரேய மொழியில் “தோரா” **(Torah)** என்ற அழைப்பர்.
- தோரா என்பதற்கு – கற்பித்தல் - கொள்கை – அறிவுறுத்துதல் என்று பொருள்.
- கிறிஸ்தவ வேத அறிஞர்கள் எபிரேய வேதாகமத்தின் ஐந்து புத்தகங்களையும் ‘Pentateuch' அதாவது “ஐந்நூல்” என்ற பொதுப்பெயரால் அழைப்பர்.

தகவல்கள்

- கி.மு. 1450 முதல் 1410 காலப்பகுதியில் எழுதப்பட்டது
- 50 அதிகாரங்களை கொண்டது
- 1553 வசனங்களை கொண்டது

வரலாற்றுக் காலவரிசை

- அதின் சம்பவங்கள் மோசேயின் பிறப்பிற்கு 3 நூற்றாண்டுகளுக்கு முந்தியவை.
- வேதாகமத்தின் எந்த புத்தகத்தின் கால அளவை காட்டிலும் ஆதிக கால அளவில் நடந்த சம்பவங்களை ஆதியாகமம் பதிவு செய்துள்ளது.
- மீதியான 65 புத்தகங்களில் சொல்லப்பட்டுள்ள கால அளவிலும் அதிககால அளவிலான சம்பங்களை ஆதியாகம் கொண்டுள்ளது.
- 4100 ஆண்டுகால வரலாறு வேதாகமத்தில் பதிவிடப்பட்டுள்ளது.
- ஆதியாகமத்தில்: 2286 ஆண்டுகள் நடந்த சம்பவங்கள்
- யாத்திராகமம் முதல் வெளிப்படுத்த 1814 ஆண்டுகள் நடந்த சம்பவங்கள்.
- ஆதியாகமத்தின் 1ம் அதிகாரம் முதல் 11ம் அதிகாரம் வரை 2000 ஆண்டுகள் நடந்த சம்பவங்கள் பதிவிடப்பட்டுள்ளது.

புவியியல் அமைப்பு

- இந்த புத்தகத்தில் தற்கால எகிப்து, இஸ்ரவேல், பாலஸ்தீனம், லெபனான், சிரியா, ஈரான், ஈராக் ஆகிய நிலப்பரப்புகள் சொல்லப்படுகின்றன.
- வேதாகமமானது ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றை கொண்டுள்ளதால் பேரரசுகள் மாறும்போது இடங்களின் பெயர்கள் மாறுவதோடு அதன் புவியியல் எல்லைகளும் மாறிவிடும்.
- அதன் விளைவாக வேதாகமத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தின் பெயர் அந்த பெயர் தவிர்ந்த வேறு பெயர்களால் அழைக்கப்படுவதும், மொழிகளால் மாற்றமடைவதும், எழுத்துக்கள் திரிபு அடைவதால் உச்சரிப்பு மாறுவதும் உண்டு.
- ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள் ‘‘பண்டைய கிழக்கு அருகாமை’’ என்று அழைக்கப்படும் பெரும் நிலப்பரப்பில் நிகழ்ந்த சம்பவங்களை விபரிக்கின்றது. அதிலே முதன்முதலாக சொல்லப்படும் புவியியல் பகுதி – ‘‘ஏதேன் தோட்டம்’’, நான்கு நதிகள் பாயும் பகுதி தற்காலத்தில் ‘‘ஈராக்’’ நாடு.
- இன்று அந்த நதிகளில் இரண்டு டைகிரஸ், யூபிரட்டஸ் என்று அறியப்படுகிறது.

மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

- ஆதியாகமம் 3:15 - இயேசு ஸ்திரியின் வித்து
- ஆதியாகமம் 4:25 - சேத்தின் வழிவந்தவர் (ஆதாமிலிருந்து)
- ஆதியாகமம் 9:26-27- சேமின் வழிவந்தவர் (நோவாவிலிருந்து)
- ஆதியாகமம் 21:12 - ஈசாக்கின் சந்ததி
- ஆதியாகமம் 25:23 - யாக்கோபின் சந்ததி
- ஆதியாகமம் 49:10 - யூதாவின் வம்சம்

தகர்க்கப்பட்ட 7 உலக தத்துவங்கள்

1. “ஆதியிலே தேவன்”- கடவுள் இல்லை என்ற நாத்திக வாதத்தை மறுத்துரைக்கிறது.
2. “ஆதியிலே தேவன்” – பலதெய்வங்கள் உண்டு என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.
3. ஆதியிலே தேவன்”- மனிதனே பிரபஞ்சத்தின் மையமானவன் என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.
4. “ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்” – எல்லாம் விதிப்படி நடக்கிறது என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.
5. “ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்” - பரிணாம வளர்ச்சியினால் உருமாற்றம் உண்டானது என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.
6. “தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” - பொருள்முதல்வதம் (பொருட்கள் அழிவதில்லை, உருவாக்கப்படுவதில்லை அவை எப்போதும் இருக்கின்றன) என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.
7. “தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” : இயற்கையனைத்தும் இறைவனே, என்ற வாதத்தை மறுத்துரைக்கிறது.

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 1 – படைப்பின் விபரிப்பு – 1ம் நாள் - வெளிச்சம், இரவும் பகலும் 2ம் நாள் - ஆகாயவிரிவு / 3ம் நாள்- காய்ந்த தரையும், புல்பூண்டுகளும் / 4ம் நாள் - வானத்தின் ஒளியூட்டிகள் / 5ம் நாள் - மின்களும், பறவைகளும் / 6ம் நாள் - நிலத்தில் வாழும் மிருகங்களும், மனிதனும்

அதிகாரம் 2 – 7ம் நாள் - தேவன் ஓய்ந்திருத்தல் / ஏதேன் தோட்டத்தில் ஆணும், பெண்ணும் / படைப்பின் சில விபரிப்புக்கள் / முதலாவது பெண் / நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்

அதிகாரம் 3 – பாவத்தின் ஆரம்பம் / விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை புசிக்க ஆதாமும், எவாளும் சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்படுதல் / நல்வாழ்வை இழத்தல் / தேவனின் நியாயத்தீர்ப்பு / மனித இனத்தின் மீதான தண்டனை / முதலாவது ஆடை / ஏதேனிலிருந்து துரத்திவிடப்படுதல்

அதிகாரம் 4 – காயீனும், ஆபேலும் / முதலாவது கொலை / தேவன் காயீனை சபித்தல் / காயீனின் சந்ததியும், குடும்ப வரலாறும் / சேத் மற்றும் ஏனோஸின் பிறப்பு

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 5 – ஆதாம் முதல் நோவா வரை வம்சவரலாறு / ஏனோக்கின் பரிசுத்தமும் தேவனோடு சஞ்சரித்தலும் / ஏனொக்கு எடுத்துக்கொள்ளபடுதலும்

அதிகாரம் 6 – பேழை கட்டப்படுதல் / பூமியில் துன்மார்க்கம் பெருகுதல் / நோவா பேழையை உருவாக்க பணிக்கபடுதல்

அதிகாரம் 7 – வெள்ளம் பெருகுதல் / பேழைக்குள் பிரவேசித்தல் / உலகம் முழுவதையும் வெள்ளம் சூழ்ந்தது / மாம்சமான யாவும் அழிக்கப்பட்டது

அதிகாரம் 8 – வெள்ளத்தின் முடிவு / அரராத் மலையில் பேழை நிற்றல் / வெளியே விடப்பட்ட காகமும், புறாவும் / கர்த்தரின் வாக்குத்தத்தம்

அதிகாரம் 9 – நோவாவின் குடும்பம் / முழு மனித குலத்திற்கான அறிவுறுத்தல்கள் / வானவில் உடன்படிக்கை / நோவா வெறித்திருத்தல் / நோவாவின் மரணம்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 10 – நோவாவின் குமாரர்களின் வம்சவரலாறு / நோவாவின் குமாரராகிய சேம் காம் யாப்பேத் என்பவர்களின் வம்சவரலாறு / முதல் அரசனான நிம்ரோத் மற்றும் கானானிய வழித்தோன்றல்கள் /

அதிகாரம் 11 – பாபேல் கோபுரம் / உலகம் முழுவதும் பேசப்பட்ட ஒரே மொழி / தேவன் மொழியை தாறுமாறாக்குதல் / சேம் முதல் ஆபிராம் வரை / தேராகு, ஆபிராம், லோத்து ஊர் என்னும் இடத்திலிருந்து ஆரானுக்கு இடம்பெயர்தல் /

அதிகாரம் 12 – ஆபிராம் அழைக்கப்படுதல் / ஆபிராம் ஆரானை விட்டு கானானுக்கு போதல் / எகிப்தில் ஆபிராமும், சாராயும் / பார்வோனுக்கு பயந்து ஆபிராம் சாராயை சகோதரியை போல நடத்துதல் /

அதிகாரம் 13 – ஆபிராம் கானானுக்கு செல்லுதல் / ஆபிராமும், லோத்தும் பிரிதலும் லோத்து சோதோமை தெரிந்துகொள்ளலும் / ஆபிராமுக்க தேவன் அளித்த மூன்றாவது வாக்குத்தத்தம்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 14 – ராஜாக்களோடு யுத்தம் / சோதோமின் ராஜாவோடு இணைந்திருந்த ராஜாக்களுக்கெதிராக நான்க ராஜாக்கள் யுத்தம் செய்தல் / ஆபிராம் லோத்தை மீட்டுக்கொள்ளுதல் / மெல்கிசேதேக்கு ஆபிராமை ஆசீர்வதித்தல்

அதிகாரம் 15 - ஆபிராமுக்கு வாக்குதத்தங்கள் அருளப்படல் / 400 ஆண்டுகால அடிமைவாழ்வு முன்னுரைக்கப்படுதல் / கானான் மீண்டும் வாக்களிக்கப்பட்டு அடையாளத்தினாலும். தரிசனத்தினாலும் உறுதிப்படுத்தபடுதல் /

அதிகாரம் 16 - ஆகார் கருவுறுதல் / ஆகார் வனாந்திரத்திற்கு ஓடிப்போதலும் திரும்பிவருதலும் / ஆபிராமுக்கும், ஆகாருக்கும் இஸ்மவேல் பிறத்தல் / ஆகாரும், தேவனுடைய தூதனும்

அதிகாரம் 17- ஆபிராம் ஆபிரகாமாகுதல் / சாராய் சாராளாகுதல் / விருத்தசேதன உடன்படிக்கை / ஆபிரகாமின் குடும்பத்தினர் விருத்தசேதனம்பண்ணப்படுதல் / உடன்படிக்கையின் அடையாளம்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 18- தேவனும் இரண்டு தூதர்களும் ஆபிரகாமிடத்தில் வருதல் / தேவன் மனிதஉருவில் ஆபிரகாமிற்கு தரிசனமாதல் / சாாளுக்கு ஒரு குமாரனை வாக்குபண்ணுதலும், அவள் நகைத்தலும் / ஆபிரகாம் தேவனிடத்தில் சோதோமுக்காக வேண்டுதல் செய்தல் /

அதிகாரம் 19- சோதோம் கொமோராவின் அழிவு / சோதோமில் லோத்துவை இரண்டு தூதர்கள் சந்தித்தல் / தீயவர்களான சோதோமியர்களுக்கு குருட்டாட்டம் பிடிக்க செய்தல் / சோதோம் கொமோரா அழிக்கப்படுதல் / லோத்தின் மனைவி உப்புத்தூணாதல் / லோத்துவும் அவனது குமாரத்திகளும் / முறையற்ற உறவினால் தோன்றிய மோவாப் மற்றும் அம்மோன்

அதிகாரம் 20- ஆபிரகாம் கேராரிலே குடியிருத்தல் / ஆபிரகாம் அபிமேலேக்கை ஏமாற்றுதல் / அபிமேலேக்கிடமிருந்து சாராள் காப்பாற்றபடுதல் /

அதிகாரம் 21- ஈசாக்கின் பிறப்பு / ஈசாக்கு இஸ்மவேலினால் பரிகசிக்கப்படுதல் / சாராளுக்கும் ஆகாருக்கும் இடையே முறுகல்நிலை உண்டாதல் / ஆகாரும், இஸ்மவேலும் வெளியேற்றபடுதல் /இஸ்மவேல் பெரியவனாதல் / ஆபிரகாம் அபிமேலேக்கோடு உடன்படிக்கை செய்தல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 22- தேவன் ஆபிரகாமை சோதித்தல் / ஈசாக்கு பலியிடப்படல் / ரெபெக்காளின் குடும்பம்

அதிகாரம் 23- சாராளின் மரணமும் அடக்கமும் / மக்பேலா குகை வாங்கப்படுதல் / சாராள் அடக்கம் செய்யப்படுதல்

அதிகாரம் 24- ஆபிரகாமின் வேலைக்காரன் ஈசாக்கிற்கு பெண்ணைக் கண்டுபிடித்தல் / ஈசாக்கு, ரெபெக்காளின் திருமணம்

அதிகாரம் 25- ஆபிரகாமின் மறுதிருமணம் / ஏசாவின் பிறப்பு / ஆபிரகாமின் மரணம் / ஏசா தனது சேஷ்டபுத்திரபாகத்தை இழத்தல்

அதிகாரம் 26- ஈசாக்கு கேராருக்கு போதலும், ரெபெக்காளை குறித்து பொய் சொல்லுதலும் / ஈசாக்கு அபிமேலேக்கோடு உடன்படிக்கை செய்தல் / பஞ்சம் ஏற்படுதலும் துரவுகள் தோண்டப்படுதலும் / ஏசாவின் மனைவிகள்

அதிகாரம் 27- ஈசாக்கு முதிர்வயதாகி ஏசாவிடம் வேட்டையாடி சமைத்துக்கொண்டுவர கேட்டல் / யாக்கோபு ஏசாவைப்போல நடித்தல் / ஏசா ஈசாக்கின் ஆசிர்வாதத்திற்காக கெஞ்சுதல் / ஏசா ஈசாக்கை விரோதித்தல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 28 - ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து ஆரானில் குடியிருக்கும் லாபானிடம் அனுப்பிவிடுதல் / ஏசா மீண்டும் திருமணம் செய்தல் / யாக்கோபு வானத்தின் நுனியை எட்டியிருந்த ஏணியை சொப்பனத்தில் காணுதலும், வாக்குத்தத்தம் பெறுதலும்

அதிகாரம் 29 - யாக்கோபு லாபானை சந்தித்தல் / யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்படுதல் / யாக்கோபு லேயாளையும், ராகேலையும் திருமணம் செய்தல் / லேயாளுக்கு ரூபன், சிமியோன், லேவி, யூதா பிறத்தல்

அதிகாரம் 30 - ராகேல் தனது வேலைக்காரியான பில்காளை யாக்கோபுவிற்கு மனைவியாக்குதல் / யாக்கோபின் குடும்பமும் ஆஸ்தியும் பெருகுதல் / சில்பாள் காத்தையும், ஆசேரையும் பெறுதல் / லேயாள் இசக்காரையும், செபுலோனையும் பெறுதல் / ராகேல் யோசேப்பை பெறுதல்

அதிகாரம் 31- யாக்கோபு இரகசியமாக லாபானை விட்டு கானானுக்கு புறப்படுதல் / ராகேல் தனது தகப்பனின் சுரூபங்களை திருடிக்கொள்ளல் / லாபான் யாக்கோபை தொடர்ந்துபோய் அவனை கண்டுபிடித்தல் / லாபானும் யாக்கோபும் உடன்படிக்கை செய்துகொள்ளல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 32 - யாக்கோபு தூதனோடு போராடுதல் / யாக்கோபு ஏசாவை சந்திக்க ஆயத்தப்படுதல் / யாக்கோபு தேவனோடு போராடுதல் / யாக்கோபின் பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்படுதல்

அதிகாரம் 33 - யாக்கோபும் ஏசாவும் மீண்டும் இணைதல் / யாக்கோபு ஏசாவை சந்தித்தபின் சீகேமில் குடியேறுதல்

அதிகாரம் 34 - ஏமோரின் குமாரனாகிய சீகேம் தீனாளோடு பலவந்தமாய் சயனித்தல் / யாக்கோபின் குமாரர் சீகேம் ஊரார் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள கட்டயப்படுத்தி அதை தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்தி அவர்களை வெட்டிப்போட்டு பட்டணத்தையும் கொள்ளையிடுதல்

அதிகாரம் 35 - யாக்கோபு பெத்தேலுக்கு போகுதல் / தேவன் யாக்கோபுக்கு வாக்குத்தத்தம் செய்து பெயரை இஸ்ரவேல் என்று மாற்றுதல் / பெஞ்சமின் பிறத்தல் / ஈசாக்கின் மரணம்

அதிகாரம் 36 - ஏசாவின் வம்சவரலாறு

அதிகாரம் 37 - யோசேப்பு அவனது மூத்த சகோதரர்களால் அடிமையாக விற்கப்படுதல்

அதிகாரம் 38 - யூதா தனது மருமகளோடு தகாத உறவுகொள்ளல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 39 - யோசேப்பு எகிப்திற்கு கொண்டுபோகபட்டு போத்திபாரினால் விலைக்கு வாங்கப்படுதல் / யோசேப்பு போத்திபாரின் மனைவிக்கு உடன்பட மறுத்தல் / போத்திபாரினால் யோசேப்பு சிறைக்கு அனுப்பப்படுதல்

அதிகாரம் 40 - பார்வோனின் வேகைக்காரர்களின் சொப்பனங்கள் விளக்கப்படுதல் / பார்வோனின் வேலைகாரர்களான ரொட்டிசுடுபவனும், திராட்சைரசம் கொடுப்பவனும் குற்றம் செய்ததால் சிறையில் தள்ளப்படுதல் / அவர்களது சொப்பனங்களும் விளக்கங்களும் / திராட்சைரசம் கொடுப்பவன் விடுவிக்கப்படுதலும், ரொட்டிசுடுபவன் கொல்லப்படுதலும்

அதிகாரம் 41 - பார்வோனின் சொப்பனங்கள் விளக்கப்படுதல் / யோசேப்பு சொப்பனங்களை விளக்குதல் / யோசேப்பு எகிப்தின் அதிகாரியாக்கப்படுதல் / ஏழு வருடங்கள் செழிப்பும் எழு வருடங்கள் வறட்சியும் உண்டாகுதல்

அதிகாரம் 42 - யாக்கோபின் குமாரரின் முதல் எகிப்திய பயணம் / யாக்கோபின் பத்து குமாரர் தானியம் வாங்க எகிப்திற்கு செல்லுதல் / யோசேப்பு அவர்களை உளவாளிகள் என்று குற்றஞ்சாட்டுதல் / பெஞ்சமினை அழைத்துவரவேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுவிக்கபடுதல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 43 - யாக்கோபின் குமாரரின் இரண்டாம் எகிப்திய பயணம் / யோசேப்பின் வீட்டில் விருந்து / பெஞ்சமின் மீது தயவு

அதிகாரம் 44 - யோசேப்பு வெள்ளிப்பாத்திரத்தை திருடியதாக சகோதரரை குற்றம் சாட்டுதல் / யூதா பெஞ்சமீனுக்காக கெஞ்சுதல்

அதிகாரம் 45 - யோசேப்பு தன்னை வெளிப்படுத்துதல் / யோசேப்பின் சகோதரர் கானானுக்கு திரும்பிப்போதல்

அதிகாரம் 46 - யாக்கோபின் குடும்பம் எகிப்திற்கு போதல் / எகிப்திற்கு போனவர்களின் பெயர்ப்பட்டியல்

அதிகாரம் 47 - யோசேப்பின் தகப்பனையும், சகோதரர்களையும் பார்வோன் சந்தித்தல் / யாக்கோபு கோசேனில் குடியேறுதல் / யோசேப்பு பார்வோனுக்காக முழு எகிப்தின் விளைச்சலையும் கொள்ளுதல்

அதிகாரம் 48 - யாக்கோபு யோசேப்பின் குமாரர்களான மனாசேயையும், எப்பிராயீமையும் ஆசீர்வதித்தல்

அதிகாரங்களின் சுருக்கமான பொருளடக்கம்

அதிகாரம் 49 - யாக்கோபு தனது 12 குமாரரையும் அழைத்தல் / யாக்கோபு தனது குமாரர்கள் மீது ஆசீர்வாதம் கூறுதல் / யாக்கோபு தனது அடக்கத்தை குறித்து கட்டளை கொடுத்தல் / யாக்கோபின் மரணம்

அதிகாரம் 50 - யோசேப்பு யாக்கோபை கானானில் அடக்கம் செய்தல் / தன்னிடத்தில் மன்னிப்பை எதிர்பார்த்த தனது சகோதரர்களிடம் பட்சமாய் பேசுதல் / யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் / யோசேப்பின் மரணம்